Survey on adoption of Family Planning Methods

* 178 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the population Council of India is conducting any survey on adoption of the Family Planning methods in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

THIRU N. DENNIS: What are the findings?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கான பரிசீலனையை நடத்துவதற்கு முற்பட்டிருக்கிறார்கள். இந்திய மக்களுடைய பொதுவான மக்கள் உற்பத்தித் தொகையின் அளவினையும், அதேபோல் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ளுகிற அந்த முறைகளையும் ஆராய முனைந்து, தமிழ்நாட்டு மாநிலத்திலேயும் ஆராய்ந்து பார்ப்பதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய 'பாப்புலேஷன் கவுன்சில்' ஒரு திட்டம் இட்டிருக்கிறது. அதைப் பல்வேறு கிராமங்களில் உள்ள மக்களுடைய மனப்பான்மையைக் கண்டறிந்து, அவர்கள் கைக்கொள்ளக்கூடிய முறைகளையும், குடும்பக் கட்டுப்பாட்டில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் ஆராய்ந்து பல்வேறு பரிசீலனைகளுக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர இருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சிக்கு அவர்கள் தமிழக அரசாங்கத்தினுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறார்கள். அவைகளை வழங்க தமிழக அரசின் அந்தத் துறை இயக்குநர் இசைந்திருக்கிறார்கள்.

* 179. வினா—திரு. இ. எஸ். தியாகராசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கருத்தடை ஆப்பரேஷன் செய்துக்கொள்பவருக்கு அளிக்கப்படும் மானியத்தை உயர்த்தி குறைந்த பட்சம் ரூ. 50 அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

அரசூரிலுள்ள கோழிப்பண்ணை.

* 180. வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள அரசூர் கிராமத்தில் கோழிப்பண்ணை வளர்ப்புக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டடம் மூடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அக்கட்டடத்தைப் பிரசவ விடுதியாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசூரிலிருந்து—ஆனால் இப்பொழுது இல்லாத—கோழி விஸ்தரிப்பு நிலையத்திற்கு கட்டடம் கட்டத் தொடங்கி அடித்தளம் வரை கட்டி முடித்த பிறகு, அந்நிலையம் சிக்கனமான முறையில் செயல்படவில்லை என்று, மற்ற நிலையங்களோடு ஒப்பு நோக்கிய அந்தக் காரணத்தால் தெரிந்தபடியால், அது மூடப்பட்டது, அக்கட்டடத்தை கட்டி

முடிப்பதால் பயனுண்டா என்பதைக் குறித்த செயற்குறிப்பு கால்நடை இயக்கு நரின் ஆலோசனையில் உள்ளது. தகுதியான திட்டமிடுவதற்கு வழிமுறை இல்லாத காரணத்தால் அந்த ஆலோசனை கூட முற்றுப் பெறவில்லை.

Works of Local Library Authorities

• 161 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to expand the work of the Local Library Authorities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (ஆ) இரண்டு நூலக ஆணைக்குழுக்கள்தாம் விரிவுபடுத்தக் கூடிய வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக் கின்றன. இப்பொழுதுள்ள நிதி நிலைமையில் நூலக ஆணைக் குழுக்கள் தம்முடைய பணிகளைப் பெரிய அளவில் விரிவுபடுத்துகிற சூழ்நிலை ஏற்பட வில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆணைக் குழுவினுடைய வேலைகளை விரிவு படுத்தும் நிலைமை இருந்தாலும்கூட, மதுரை போன்ற இடத்தில் உள்ள நூலகத்தில் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக எந்த விதமான புதுப் புத்தகங் களும் தருவிக்கப்படவில்லை. அம்மாதிரி முக்கிய கேந்திரமான இடங்களிளெல் லாம் புதுப் புத்தகங்களைத் தருவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது மாவட்ட நூலக ஆணைக் குழுவினிடத்தில் இருக்கின்ற நிதி வசதி, அதனுடைய நிர்வாகச் செலவுக்குப் போதுமான அளவுக்கே இருக்கிறதனால், நூல்கள், மற்ற வைகள் வாங்க வேண்டிய அளவுக்கு அமையவில்லை. அண்மையில் கோடைக் கானலில் கூடிய நூலக ஆணைக் குழுத் தலைவர்களுடைய மாநாட்டில், நூலக செஸ்ஸை மூன்று பைசாவிலிருந்து ஐந்து பைசா அளவுக்கு உயர்த்துவதால் செஸ் தொகை ஓரளவு உயர்வதோடு, அரசாங்கம் தரும் ஈட்டு மானியத் தொகையும் ஓரளவு கூடுதலாகும்; அப்படி வருகின்றபோது, அதிகமான அளவு நூல்கள் வாங்க வசதிகள் ஏற்படும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்போது, நூல்கள் வாங்கும் சூழ்நிலையை நூலக ஆணைக் குழுக்கள் பெறும். இப்பொழுது, பல்வேறு ஆணைக் குழுக்கள் நூல்கள் வாங்க முடியாத அளவுக்குத்தான் இருக்கின்றன. இந்தக் குறை பாட்டைப் போக்கத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, பெரும்பாலும் நூலகங்கள் நகரப் புறங்களில்தான் அமைந்திருக்கின்றன. எல்லோருக்கும் நூல்களைப் படிப்ப தற்கு வசதியாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் நூலகங்களை ஏற்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நாம் கொண் டிருக்கிற கொள்கைப்படி, அதன் அடிப்படையில் 5,000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட இடங்களில் ஒரு கிளை நூலகம் ஏற்படுத்தப்படுகிறது. 1,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை உள்ள இடங்களில் வழங்கு நூலகங்களை அமைக் கலாம் என்று நாம் திட்டம் தீட்டி, அதற்கேற்ற முறையில் நடவடிக்கைகளை